# இக்னோ பல்கலை. மாணவர் சேர்க்கை

**ஓசூர், ஜூலை 6–**

ஓசூர் அருகே கோனேரிப்பள்ளியில் உள்ள பிளம்சிடெக் பாலிடெக்னிக் கல்லூரியில், மத்திய அரசின் இந்திரா காந்தி தேசிய திறந்தநிலை பல்கலைக்கழக (இக்னோ) மையம் 20 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு வருகிறது.

இந்த மையத்தில் நடப்பு கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை நடந்து வருகிறது. இளங்கலைப் படிப்புகளான பி.ஏ, பி.எஸ்சி., பி.காம்., பி.எஸ்.டபள்யூ, பிசிஏ, மற்றும் முதுநிலை படிப்புகளான எம்.ஏ, எம்.காம், எம்.எஸ்.டபள்யூ, எம்.ஏ.,(சைக்காலாஜி) எம்சிஏ, எம்பிஏ படிப்புகளில் மாணவர் சேர்க்கை நடக்கிறது. இதில் எஸ்சி, எஸ்டி மாணவர்களுக்கு அட்மிஷன்

இலவசமாக வழங்கப் படுகிறது. சிறு, குறு தொழில் நடத்துபவர்கள் புதிய தொழில் தொடங்கவுள்ள மாணவர்கள், தொழில் முனைவோர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் இளங்கலை படிப்பான எம்.எஸ்.எம்.இ படிப்பிற்கான மாணவர் சேர்க்கை இந்த கல்வியாண்டில் அறிமுகம் செய்யப் பட்டுள்ளது. மேலும் 6 மாத சான்றிதழ் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையும் நடந்து வருகிறது.

அனைத்து படிப்புகளும் பட்டியல் இன மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. பிற மாணவர்கள் மிக குறைந்த கட்டணத்தில் படிப்பில் சேரலாம். இப்படிப்புகளுக்கு வயது வரம்பு இல்லை. வீட்டிலிருந்தபடி இந்த பாடப் பிரிவுகளில் சேர்ந்து தொலைத்தூர கல்வியாக படிக்கலாம். இங்கு பயிலும் மாணவர்களுக்கு மத்திய, மாநில அரசுகளால் அங்கீரிக்கப் பட்ட சான்றிதழ் வழங்கப் படும்.

மேலும் விவரங்களுக்கு இந்திரா காந்தி தேசிய திறந்த நிலை பல்கலைக் கழக, ஓசூர் பிளம்சிடெக் கல்வி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் சுதாகரன் மற்றும் கைலாசம் ஆகியோரை தொடர்பு கொண்டு பயன்பெறலாம். ஆன்லைன் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம் என கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.